**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**அசல் வழக்கு எண் : 14/2020**
**நாள் : 30/08/2023, புதன்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பின் 1-வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10-வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் - அசோக் | த/பெயர் - அப்பாவு |
| வயது - 27 | தொழில் - |
| விலாசம் - எண்.484, ராள்ளபாடி கிராமம், கொம்பு ரெட்டி கண்டிகை, ஊத்துக்கோட்டை கிராமம், திருவள்ளூர் மாவட்டம். | |

**குறுக்கு விசாரணை (PW1)**

தாவா சொத்து இருக்கும் கிராமத்தில் நான் வசிக்கவில்லை. எனது தகப்பனார் கடைசி காலகட்டத்தில் தற்போது நான் வசிக்கும் ஊரில் தான் வசித்தார். எனது தகப்பனார் 25 ஆண்டுகளாக நான் தற்போது உள்ள விலாசத்தில் தான் இருந்தார். எனது தகப்பனார் உயிருடன் இருக்கும் காலத்தில் பாகப்பிரிவினை ஏற்படுத்தி பயிர் செய்தார்களா என்றால் இல்லை. ஆனால் தனித்தனியாக விவசாயம் செய்தார்கள். பாகம் பிரித்து தனித்தனியாக விவசாயம் செய்தார்கள் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது தகப்பனார் தாவா சொத்து உள்ள கிராமத்தை காலிசெய்து தற்போது நீங்கள் இருக்கும் விலாசத்திற்கு எதற்காக வந்தார் என்ற விவரம் தெரியுமா என்று கேட்டால் தெரியும். நிலம் பிரச்சனையால் எனது தகப்பனார் காலிசெய்துவிட்டார். இந்த விவரத்தை வாதுரையில் குறிப்பிட்டுள்ளீர்களா என்றால் கூறியுள்ளேன். பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிருரையின் அடிப்படையில் நில பிரச்சனையால் ஊரை காலிசெய்துவிட்டதாக பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள்

என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிருரையை முழுமையாக படித்து பார்த்தேன். 5 மற்றும் 6 பிரதிவாதிகள் எனது அத்தைகள் என்று சொன்னால் சரிதான். எனது தாய் தந்தையர் இடையே ஏற்பட்ட பிரச்சனையின் அடிப்படையில் எனது தகப்பனார் மருந்து குடித்து தற்கொலைக்கு முயற்சி செய்துவிட்டார் அதனால் தான் ஊரை காலிசெய்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. எனது தந்தை பூச்சிமருத்து அருந்தியதன் விளைவாக மருத்துவமனையில் நீண்ட நாட்கள் சிகிச்சை பெற்றார் என்றால் சரியல்ல. சிகிச்சைக்காக தங்களுடைய தகப்பனாரின் அண்ணன் செங்கன் ரூ.20,000/- கொடுத்தார் என்றும், அதனால் தனது தகப்பனாரின் பாகத்தை விற்றுவிட்டு ஊரை காலிசெய்து சென்றுவிட்டீர்கள் என்று சொன்னால் சரியல்ல. தற்போது இருக்கும் ஊரில் எனது தகப்பனாருக்கு சொத்து உள்ளது. அந்த சொத்து சுயமாக கிரையம் பெற்ற சொத்தாகும். அதன் சர்வே எண் ஆவணத்தை பார்த்து தான் சொல்ல முடியும். எனது தகப்பனார் இறந்தபிறகு எனது தாயார் சொத்தை பாகம் கேட்கவில்லை என்றால் சரியல்ல. பாகம் கேட்டுள்ளார். இந்த விவரத்தை வாதுரை மற்றும் நிரூபணவாக்குமூலத்தில் கூறிவல்லை என்று சொன்னால் கூறியுள்ளேன். தாவா சொத்து உள்ள கிராமத்தில் வீட்டு மனை மட்டும் தான் உள்ளது என்றும், மற்ற நிலங்கள் எதுவும் இல்லை என்று பிரதிவாதிகள் பதிலுரையில் கூறியுள்ளார்கள் என்றால் என்னை ஏமாற்றுகிறார்கள். நான் டிப்ளமோ படித்துள்ளேன். எனது தகப்பனார் 10ம் வகுப்பு வரை படித்துள்ளார். எனது பெயரில் எனது தாய் தந்தையர் சொத்து எதுவும் வாங்கவில்லை. சாட்சி மீண்டும் பாதுகாவலர் நியமித்து தனது பெயரில் கிரையம் பதிவு செய்யப்பட்டுள்ளதாக கூறுகிறார். தகப்பனார் தாவா சொத்து இருக்கும் ஊரைவிட்டு வந்த பிறகு பிரதிவாதிகள் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். எங்களை அனுபவிக்க விடவில்லை. தங்கள் தாயார் அனுபவிக்க முயற்சி செய்ததற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தங்களுக்கும்,

தங்கள் அத்தைகளுக்கும் சமுகமான உறவுமுறை உள்ளதா என்றால் இல்லை. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பும் கிடையாது. எனது தகப்பனாரின் கையொப்பம் கிரைய பத்திரத்தில் பார்த்துள்ளேன். பார்த்தால் தெரியும். தங்களது கிரைய ஆவணத்தை கொண்டுவர முடியுமா என்று கேட்டால் முடியும்.

வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப் பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**//கையொப்பம்//**
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பொன்னேரி.**